**V.V.VANNIAPERUMAL COLLEGE FOR WOMEN**
(Belonging to Virudhunagar Hindu Nadars)
An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University, Madurai
*Reaccredited with 'A++' Grade (4th Cycle) by NAAC*
**VIRUDHUNAGAR**
**Quality Education with Wisdom and Values**

## மாணவியர் பின்பற்ற வேண்டிய கல்லூரி விதிமுறைகள் 2025-2026

### கல்லூரி நேரம்

- திங்கள், புதன், வெள்ளிக்கிழமை : 09.25 a.m. to 03.30 p.m.
  (கல்லூரிப் பேருந்து - 03.40 p.m. முதல் இயக்கமாகும்)
- செவ்வாய் மற்றும் வியாழக்கிழமை : 09.25 a.m. to 04.00 p.m.
  (கல்லூரிப் பேருந்து - 04.10 p.m. முதல் இயக்கமாகும்)
- சனிக்கிழமை மற்றும் விடுதி மாணவியர் விடுமுறையில் செல்லும் நாள் : 08.55 a.m. to 01.00 p.m.
  (கல்லூரிப் பேருந்து - 01.10 p.m. முதல் இயக்கமாகும்)
- மாதம் ஒரு புதன்கிழமை ஆசிரியர்-மாணவியர் கூட்டம் (Tutor-Ward Meeting) நடைபெறும் நாள் : 09.25 a.m. to 04.00 p.m.
  (கல்லூரிப் பேருந்து - 04.10 p.m. முதல் இயக்கமாகும்)
- காலை 09.25 a.m. / 08.55 a.m. Common Prayer நடைபெறும். அதுசமயம் வகுப்பறைக்குள் இருப்பது அவசியம்

### உடைக் கட்டுப்பாடு

மாணவியர் நலனைக் கருத்தில் கொண்டு, பின்வரும் dress code-ஐ கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

i) சுரிதார் பேன்ட், சல்வார், பாட்டியாலா பேன்ட் அல்லது கணுக்கால் நீளம் வரை/அதற்கு மேல் நீளமான பேன்ட் அணிய வேண்டும். (ஜீன்ஸ் பேன்ட் மற்றும் நீண்ட பாவாடை உடைகள் அனுமதிக்கப்படாது.)

ii) லெக்கிங்ஸ் அணிந்தால் பக்கவாட்டு பிளவுகள் இல்லாத நீண்ட (முழங்கால் நீளம்) டாப்ஸ்உடன் மட்டுமே அணிய அனுமதிக்கப்படுகிறது.

iii) துப்பட்டாவை இருதோள் மீதும் சரியாகப் ஊக்கு கொண்டு பொருத்த வேண்டும்.

iv) Transparent ஆன ஆடைகள்/வலை ஆடைகள் (வலை துப்பட்டா உட்பட) அனுமதிக்கப்படாது.

v) சேர்த்து கிளிப் பண்ணப்படாத/பின்னப்படாத சிகை அலங்காரம் (Free hair Style) அனுமதிக்கப்படாது.

## மற்ற விதிமுறைகள்

1. மாணவியர் வளாகத்திற்குள் நுழையும் போதிலிருந்து வளாகத்தை விட்டு வெளியேறும் வரையிலும் தங்கள் அடையாள அட்டைகளை அணிய வேண்டும்.

2. கல்லூரி பேருந்து சேவைகளுக்கு பணம் செலுத்திய மாணவியர் கல்லூரி பேருந்தில் மட்டுமே வளாகத்தை விட்டு வெளியேற வேண்டும். அவர்கள் கல்லூரிப் பேருந்து அட்டை வைத்திருக்க வேண்டும்.

3. கல்லூரி பேருந்து சேவைகளுக்கு பணம் செலுத்தாத மாணவியர் கல்லூரி போக்குவரத்து சேவையைப் பெற அனுமதிக்கப்படாது. கல்லூரி வளாகத்தை விட்டு வெளியேற அவர்கள் தம் கேட் பாஸ் வைத்திருக்க வேண்டும்.

4. மாதம் ஒரு முறை, அனைத்து விடுதி மாணவியரும் அவரவர் சொந்த ஊர்களுக்கு அனுப்பப்படுவார்கள். கல்லூரி விடுதி மூடப்பட்டிருக்கும் போது, விடுதியில் தங்குவதற்கு எந்த மாணவியரையும் அனுமதிப்பதில்லை.

5. மாணவியர் கல்லூரி வளாகத்திற்குள் மொபைல் போன்களைப் பயன்படுத்துவது கண்டிப்பாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. கல்லூரி விதியை மீறி போன் பயன்படுத்துவது கண்டறியப்பட்டால் நிர்வாகம் எடுக்கும் நடவடிக்கைக்குக் கட்டுப்பட வேண்டும்.

6. கல்லூரி வளாகத்திற்குள் மாணவியர் தங்கள் / தங்கள் தோழியர் பிறந்தநாள் போன்ற தனிப்பட்ட கொண்டாட்டத்தைக் கொண்டாட அனுமதி இல்லை.

7. பொறுப்பு ஆசிரியரின் முன் அனுமதி பெற்ற பின்னர், பெற்றோரின் ஒப்புதலுடன் விடுப்புப் படிவத்தைச் சமர்ப்பித்து மாணவியர் விடுப்பில் செல்ல வேண்டும். உடல்நிலை சரியில்லை என்றால், மருத்துவ விடுப்புக்கடிதம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

8. தேவையற்ற நோக்கத்திற்காகவோ, மொபைல் போன்களைப் பயன்படுத்துவதற்காகவோ மற்ற மாணவியருக்கு, குறிப்பாக விடுதியில் தங்கும் மாணவியருக்கு உதவி செய்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

9. கல்லூரி / ஆசிரியர்கள் / மாணவியர் குறித்து சமூக ஊடகங்களில் தேவையற்ற வீடியோக்களை மற்றவர்களுக்கு அனுப்புவது தெரியவந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. மாணவியரின் சமூக விரோத நடவடிக்கைகள் கல்லூரி நிர்வாகத்தால் கடுமையாகக் கையாளப்படும்.

11. Industial Visit, Field Visit, Internship ஏற்பாடு செய்யப்பட்டால், அந்தந்த துறைத் தலைவரால் பெற்றோருக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படும்.

12. கல்லூரிகளுக்கு இடையே நடக்கும் போட்டிகளுக்கு மாணவியர் வெளியே அழைத்துச் செல்லப்படும்போது, அதே நாளில் வீடு அல்லது விடுதிக்குத் திரும்புவர்.

13. ஆசிரியர்கள் அல்லது சக மாணவியரின் குடும்ப நிகழ்ச்சிக்கு எந்தவொரு மாணவியரையும், ஆசிரியர்கள் ஒருபோதும் அழைத்துக் கொண்டு செல்வதில்லை.

மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை மாணவியர் பின்பற்றவில்லை என்றால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு கல்லூரி நிர்வாகமோ/ஆசிரியர்களோ பொறுப்பல்ல, பெற்றோர்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.

**Dr. S. Cinthana**
**Principal**